# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் ● திருவள்ளுவர் ஆண்டு 2056, - டிசம்பர் 27, 2025

Weekly E-paper ● December 27, 2025






# தலைவிரித்தாடும் மதவெறி!

சுப. வீரபாண்டியன்

## எஸ்.ஐ.ஆர் வரைவு வாக்காளர் பட்டியல் குளறுபடிகள்..!

வழக்கறிஞர் இராம.வைரமுத்து

## முதலமைச்சர் அறைகூவல்

தென்பாண்டியன்

## திருமாவேலன் நூல்களை வெளியிட்டார் முதலமைச்சர்!

# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் ● திருவள்ளுவர் ஆண்டு 2056, - டிசம்பர் 27, 2025 | Weekly E-paper ● December 27, 2025


# தலைவிரித்தாடும் மதவெறி!

சுப. வீரபாண்டியன்





மதச்சார்பின்மை என்பது இந்திய அரசமைப்புச் சட்டத்திலும் இடம் பெற்று இருக்கிற, இந்திய அரசியல் கட்சிகளாலும் முன்மொழியப்படுகிற ஒரு கோட்பாடு ! ஆனால் பிற மதத்தினரைத் தாக்குவதும், அழிப்பதும்தான் இன்று இந்தியாவை ஆளும் கட்சியின் நிலைப்பாடு !

அந்த நிலைப்பாடும், அதன் கோர முகமும் அவ்வப்போது இந்தியாவில் வெளிப்பட்டு கொண்டே இருக்கின்றன! அண்மையில், கிறித்துவ மக்கள் கிறிஸ்மஸ் விழாவைக் கொண்டாடிக் கொண்டிருக்கும் வேளையில், பாஜக ஆளும் மாநிலங்களான ராஜஸ்தான், மத்திய பிரதேசம், ஒடிசா, உத்தரப்பிரதேசம் உள்ளிட்ட மாநிலங்களில் வன்முறை வெடித்திருக்கிறது. இந்து மத வெறியர்கள், தேவாலயங்களை அடித்து நொறுக்கி இருக்கின்றனர். கிறிஸ்துமஸ் தாத்தா தொப்பிகளை விற்பனை செய்பவரைக் கூட தாக்கித் தங்களின் வீரத்தை வெளிக்காட்டி உள்ளனர்!

எல்லாவற்றையும் தாண்டி, பார்வை இல்லாத ஒரு பெண்ணை அந்தக் கும்பல் அடித்து தாக்கும் கோர நிகழ்வை வலையொளிகளில் பார்க்கும்போதே நம் மனம் கலங்குகிறது! மதச்சார்பின்மையை விடுங்கள். ஜனநாயகக் கோட்பாட்டினைக் கூடப் பிறகு பார்த்துக் கொள்ளலாம். ஆனால், அடிப்படை மனித நேயமே இல்லாத ஒரு வன்முறைக் கூட்டம், இந்த நாட்டை ஆள்கிறது என்பதும், பல பகுதிகளில் பரவிக் கொண்டிருக்கிறது என்பதும் எவ்வளவு பெரிய ஆபத்து என்பதை மக்கள் உணர வேண்டும்!

இந்த அராஜகக் கும்பலிடம் பாடம் கற்றதாலும், பணம் பெற்றதாலும்தான், இங்கே சில கைக்கூலிகள், கடப்பாரை கொண்டு திராவிடக் கட்டிடத்தை இடிப்பேன் என்றும், அண்ணா, கலைஞர் நினைவிடங்களைத் தகர்த்து விடுவேன் என்றும் கூச்சல் போடுவதைப் பார்க்கிறோம்.

தமிழ்நாட்டை மட்டுமாவது இந்த மதவெறிக் கூட்டத்திடமிருந்து காப்பாற்ற வேண்டுமானால், பாஜகவும், அதன் கைக்கூலிகளும் தமிழ்நாட்டில் சிறு அளவில் கூட கால் ஊன்றி விடாமல் பார்த்துக் கொள்ள வேண்டிய கடமை நமக்கு இருக்கிறது!

குறிப்பாக, வரும் தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலில் நாம் மிகவும் கவனமாக இருக்க வேண்டியுள்ளது ! பாஜகவை மட்டுமல்லாமல், அதனோடு கூட்டணி வைத்திருக்கும் அடிமைக் கட்சியையும், மறைமுகமாக திரள் நிதி வாங்கிக்கொண்டு சதித் திட்டம் தீட்டும் அழிவு சக்திகளையும் தேர்தலில் மக்கள் முற்றுமாகப் புறக்கணிக்க வேண்டும்!

இல்லையேல், தமிழ்நாட்டிலும் அடுத்த ஆண்டு, தேவாலயங்கள் நொறுக்கப்படும், பள்ளிவாசல்கள் தகர்க்கப்படும்! ●

## நன்றி திருமா!



பார்ப்பனக் கடப்பாறை கொண்டு, திராவிடக் கட்டிடத்தை இடிப்பேன் என்று ஒரு கூச்சல் கேட்ட போது, இதற்கும் தனக்கும் தொடர்பு இல்லை என்று கருதி, விடுதலைச் சிறுத்தைகளின் தலைவர் தொல். திருமாவளவன் விலகிச் சென்று இருக்கலாம்!

இந்த வன்முறைக் குரலை எதிர்த்து எச்சரிக்கை செய்தால், அதற்கு எதிர் வாதம் செய்யாமல், தன் மீது சேற்றை அள்ளி இறைப்பார்கள் என்பது தெரியும் என்பதால், திருமாவளவன் மௌனமாக இருந்திருக்கலாம்!

ஆனால் எது குறித்தும் கவலை கொள்ளாமல், நேர்மையாகத் தன் குரலை உயர்த்தி இருக்கிறார் சிறுத்தைகளின் தலைவர் ! இந்தப் பேச்சுக்குத் தன்னுடைய கடுமையான கண்டனத்தை அவர் பதிவு செய்திருக்கிறார் ! அவர் அம்பேத்கர், பெரியாரின் பிள்ளை என்பதை அவருடைய பேச்சு மீண்டும் ஒருமுறை மெய்ப்பித்திருக்கிறது!

நன்றி திருமா !

# எஸ்.ஐ.ஆர் வரைவு வாக்காளர் பட்டியல் குளறுபடிகள்..!

● வழக்கறிஞர் இராம. வைரமுத்து


தமிழ்நாட்டில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தத்திற்கு பிறகு வெளியிடப்பட்டுள்ள வரைவு வாக்காளர் பட்டியலில் 97 லட்சத்து 37 ஆயிரத்து 831 வாக்காளர்களின் பெயர்கள் நீக்கப்பட்டுள்ளது. அதில் உயிரிழந்த வாக்காளர்கள் 26,95,672 பேர், இடம் பெயர்ந்தோர் மற்றும் குறிப்பிட்ட முகவரியில் வசிக்காதவர்கள் 66,44,881 பேர், இரட்டை பதிவு வாக்காளர்கள் 3,98,278 பேர் ஆவர். தமிழ்நாட்டில் எஸ்.ஐ.ஆர் நடைமுறைக்கு முன்பு 6.41 கோடி வாக்காளர்கள் இருந்தனர். தற்போது இந்த எண்ணிக்கை 5.43 கோடியாக குறைந்துள்ளது. மொத்த எண்ணிக்கையில் 15.18% வாக்காளர்கள் நீக்கப்பட்டுள்ளனர்.


முதல்வர் மு.க.ஸ்டாலினின் கொளத்தூர் தொகுதியில் 1,03,812 லட்சம் பேர் வாக்காளர் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டிருக்கிறார்கள். இது அந்தத் தொகுதியின் மொத்த வாக்காளர்களில் 35.71 சதவீதமாகும். துணை முதல்வர் உதயநிதியின் சேப்பாக்கம் திருவல்லிக்கேணி தொகுதியில் 89,241 நீக்கப்பட்டிருக்கிறார்கள். இது அந்தத் தொகுதியின் மொத்த வாக்காளர்களில் 37.17 சதவீதமாகும். இந்த இரண்டு தொகுதிகளிலும் நீக்கப்பட்ட வாக்காளர்களின் சதவீதம் மாநில சராசரி சதவீதத்தை விட இரண்டு மடங்கு அதிகம் என்பது கவனிக்கத்தக்கது. அதே நேரத்தில் அதிமுக பொதுச்செயலாளர் பழனிசாமியின் எடப்பாடி தொகுதியில் 26,375 பேரும், ஓ.பன்னீர் செல்வத்தின் போடி தொகுதியில் 24,386 பேரும், அதிமுக முன்னாள் அமைச்சர்களான சி.விஜயபாஸ்கரின் விராலிமலை தொகுதியில் 17,104 பேரும், காமராஜின் நன்னிலம் தொகுதியில் 28,888 பேரும் மட்டுமே நீக்கப்பட்டுள்ளனர். இதே போல், பாஜக மாநிலத் தலைவர் நயினார் நாகேந்திரனின் திருநெல்வேலி தொகுதியில் 42,119 பேரும், தமிழிசை போட்டியிட விரும்புவதாகச் சொல்லப்படும் நாங்குநேரி தொகுதியில் 54,260 பேரும் மட்டுமே நீக்கப்பட்டுள்ளனர். இதன் அடிப்படையில் தான் தங்கள் கூட்டணி வெற்றி பெற வாய்ப்புள்ள தொகுதிகளில் எல்லாம் அதிகமான வாக்காளர்கள் நீக்கப்பட்டிருப்பதாக குற்றம் சாட்டுகிறது தி.மு.க.

மறுபுறம் எஸ்.ஐ.ஆர் நடைமுறை மற்றும் வரைவு வாக்காளர் பட்டியலை தொடக்கத்தில் முழுமையாக வரவேற்ற அ.தி.மு.கவின் நிலைப்பாட்டில் நாட்கள் செல்லச் செல்ல மாறுதல் ஏற்பட்டிருப்பதை நாம் காண முடிகிறது. மதுரை மாநகர் மாவட்ட அதிமுக சார்பில் நடைபெற்ற எஸ்.ஐ.ஆர் வரைவு வாக்காளர் பட்டியல் குறித்த ஆலோசனைக் கூட்டத்திற்கு தலைமை வகித்து பேசிய முன்னாள் அமைச்சர் செல்லூர் ராஜூ "எஸ்.ஐ.ஆர் பணியின் மூலம் என் குடும்பத்தையே பிரித்து விட்டார்கள். என் குடும்பத்தில் ஒவ்வொருவருக்கும் வெவ்வேறு இடத்தில் சீரியல் நம்பர் வந்துள்ளது. எங்கள் குடும்பம் ஒற்றுமையாக உள்ளது. பிரித்து விட வேண்டாம் என்று கலெக்டரிடம் தெரிவித்தேன்" என்று குறிப்பிட்டுள்ளார். முன்னாள் அமைச்சர் என்பதால் மாவட்ட ஆட்சியரிடம் நேரடியாக சொல்லி விட்டார். பாமர மக்கள் யாரிடம் போய் சொல்வார்கள்.

சென்னை மாவட்டத்தில் 19.12.2025 மற்றும் 20.12.2025 ஆகிய இரண்டு நாட்களில் மட்டும் அரசியல் கட்சிகளின் வாக்குச்சாவடி முகவர்கள் (BLA - 2) வரைவு வாக்காளர் பட்டியல் தொடர்பாக 2,48,294 ஆட்சேபனை மனுக்களை சமர்ப்பித்துள்ளனர். இதில் தி.மு.க 65,000 மனுக்களையும், அ.தி.மு.க 63,000 மனுக்களையும், பா.ஜ.க 54,000 மனுக்களையும் சமர்ப்பித்துள்ளது.

வரைவு வாக்காளர் பட்டியல் மூலம் போலி வாக்காளர்கள் நீக்கப்பட்டுள்ளனர் என்று மகிழ்ச்சி தெரிவித்த அ.தி.மு.கவும், பா.ஜ.கவும் இரண்டே நாட்களில் சென்னை மாவட்டத்தில் மட்டும் இத்தனை ஆயிரம் ஆட்சேபனை மனுக்களை சமர்ப்பித்துள்ளதன் மூலம் எஸ்.ஐ.ஆர் தொடர்பாக தி.மு.க முன்வைத்த குற்றச்சாட்டுகள் உண்மை என்பதை உணர முடிகிறது.




2021ஆம் ஆண்டு உயிரிழந்த பாடலாசிரியரும், அதிமுக முன்னாள் அவைத் தலைவருமான புலமைப்பித்தனின் பெயர் மயிலாப்பூர் சட்டமன்றத் தொகுதி 172 வது பாகத்தில் வரிசை எண் 78 ஆக இடம் பெற்றுள்ளது. மதுரை மேற்கு சட்டமன்றத் தொகுதி 148 வது பாகத்தில் வரிசை எண் 190 மற்றும் 191 சக்தி (வயது - 35, வீட்டு எண் - 24/65, கணவர் பெயர் - நாராயணமூர்த்தி) என்ற ஒரே பெண்மணியின் பெயர் இரு வேறு வாக்காளர் அடையாள அட்டை (YQN1870443 & SBW0599647) எண்ணுடன் இடம் பெற்றுள்ளது. இறப்பு மற்றும் இரட்டை பதிவுகளை துல்லியமாக கண்டறிந்து நீக்க எஸ்.ஐ.ஆர் நடைமுறைப்படுத்தப்படுகிறது என்று கூறிய தேர்தல் ஆணையத்தின் லட்சணத்தை உணர்ந்து கொள்ள இதுவே சான்றாகும். இதைத் தாண்டி, திருப்பரங்குன்றம் சட்டமன்றத் தொகுதி 76 வது பாகத்தில் உள்ள இரண்டு வாக்காளர்களின் பெயர் மட்டும் இந்தியில் இருப்பது, பெயர் இடம் பெறாமல் இருப்பது, வெறும் புள்ளிகள் மட்டும் இடம் பெறுவது என எஸ்.ஐ.ஆர் வரைவு வாக்காளர் பட்டியலில் உள்ள குளறுபடிகள் நீண்டு கொண்டே போகிறது.

வரைவு வாக்காளர் பட்டியல் வெளிவந்த நிமிடம் முதல் தி.மு.க முழு வீச்சில் களத்தில் இறங்கி அதன் வாக்குச்சாவடி முகவர்கள் மூலம் முந்தைய வாக்காளர் பட்டியல் மற்றும் எஸ்.ஐ.ஆர் வரைவு வாக்காளர் பட்டியலையும் ஒப்பிட்டு விடுபட்ட வாக்காளர்களின் வாக்குரிமையை பாதுகாக்கும் பணியில் முனைப்போடு ஈடுபட்டு வருவது பாராட்டத் தக்கது.

●

தமிழராய் வேர் பிடி ! உலகெலாம் கிளை விரி!
# கருஞ்சட்டைத் தமிழர்

## முதலமைச்சர் அறைகூவல்



அண்மையில் 25-12-2025 அன்று தமிழ்நாடு முதலமைச்சர் தன் எக்ஸ் தளத்தின் மூலம் ஒரு செய்தியைச் சொல்லியிருந்தார். அதில் அவர் "சிறுபான்மையினர் அச்சமின்றி வாழத் துணையிருப்பதில்தான் பெரும்பான்மையினரின் பலமும் இருக்கிறது, குணமும் இருக்கிறது. பெரும்பான்மை என்ற பெயரில் சில வலதுசாரி வன்முறைக் கும்பல்கள் தாக்குதல்களிலும் கலவரங்களிலும் ஈடுபடுவது, அதுவும் பிரதமர் மோடி கிறிஸ்துமஸ் விழாவில் பங்கெடுக்கும்போதே ஈடுபடுவது, நாட்டு மக்களுக்குத் தவறான செய்தியையே கொண்டு சேர்க்கும்.

மணிப்பூர் கலவரங்களைத் தொடர்ந்து, இப்போது ஜபல்பூர் - ராய்பூர் மற்றும் பிற இடங்களிலும் சிறுபான்மையினர் மீது தாக்குதல் என்பதை நல்லிணக்கத்தை விரும்பும் நாட்டு மக்கள் எவராலும் ஏற்றுக்கொள்ள முடியாது. மத்திய பாஜக அரசு பொறுப்பேற்ற பிறகு, சிறுபான்மையினருக்கு எதிரான வெறுப்புப் பேச்சுகள் 74 சதவீதம் அதிகரித்திருப்பதாகச் சொல்லப்படும் புள்ளிவிவரங்கள், எதிர்காலம் எதிர் நோக்கியுள்ள ஆபத்துகளை உணர்த்துகிறது" என்று கூறியிருக்கிறார்.

இதன்மூலம்ஒன்றியத்தின்பன்முகத்தன்மை, கலாசாரம், ஒற்றுமையைச் சீரழிக்கிறது மதவாத பா.ஜ.க. என்பதைத் தெளிவாகக் கோடிட்டு இருக்கிறார் முதலமைச்சர் ஸ்டாலின் அவர்கள்.

இதுதான் நாட்டின் இன்றையநிலை.

அதனால் பா.ஜ.க உள்ளிட்ட மதவாதக் காவிக் கும்பல்களைத் துடைத்தெறிய வேண்டும் இந்த மண்ணில் இருந்து, மக்கள்!

ஆசிரியர்:
சுப.வீரபாண்டியன்
பொறுப்பாசிரியர்
எழில்.இளங்கோவன்
உதவி ஆசிரியர்:
வெற்றிச்செல்வன்
வெளியீடு:
திராவிட இயக்கத் தமிழர் பேரவை

இணையதளம்:
www.keetru.com,
www.karunchattaibooks.com
மின் அஞ்சல்:
karunchattai@gmail.com
டுவிட்டர்: suba_vee
தொடர்புக்கு
120 என்.டி. ராமராவ் தெரு,
ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்
சென்னை– 600 024,
தொலைபேசி: 044-2472 6408



சுயமரியாதை, சமத்துவம், சமூகநீதியைச் சொல்லி தமிழர்களை நிமிரச்செய்த ஐயா தந்தை பெரியார் அவர்களின் 52ஆம் நினைவு நாளான 24-12-2025 அன்று, திராவிட இயக்கத் தமிழர் பேரவைத் தலைவர் பேராசிரியர் சுப.வீரபாண்டியன் அவர்கள் தலைமையில், தலைமை அலுவலகத்தில் தோழர்கள் பொள்ளாச்சி மா.உமாபதி, பெல் ராஜன், நெல்லை பாபு, செந்தாமரைக் கண்ணன், திராவிடமணி உள்ளிட்ட பேரவைத் தோழர்கள் ஐயாவின் படத்தைத் திறந்து வைத்து மரியாதை செலுத்தினார்கள்.

# திருமாவேலன் நூல்களை வெளியிட்டார் முதலமைச்சர்!





எழுத்தாளர் ப.திருமாவேலன் எழுதிய கருஞ்சட்டைப் பதிப்பகத்தின் வெளியீடுகளான 'தீரர்கள் கோட்டம் தி.மு.க', 'திராவிட அரசியல் திராவிட அரசு இயல்' ஆகிய இரு நூல்களும், கவிதா பதிப்பகம் வெளியிடான 'முறைசெய்து காப்பாற்றும் முதலமைச்சர்' ஆகிய மூன்று நூல்கள் வெயீயிட்டு விழா 22.12.2025 திங்கட்கிழமை சென்னை அண்ணா நூற்றாண்டு நூலகம் அரங்கில் நடைபெற்றது.



'தீரர்கள் கோட்டம் தி.மு.க', 'திராவிட அரசியல் திராவிட அரசு இயல்' ஆகிய இரு நூல்களை மாண்புமிகு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் வெளியிட, மானமிகு ஆசிரியர் கி. வீரமணி அவர்கள் பெற்றுக் கொண்டார்கள். 'முறைசெய்து காப்பாற்றும் முதலமைச்சர்' என்னும் நூலை மானமிகு ஆசிரியர் கி.வீரமணி அவர்கள் வெளியிட மேனால் ஒன்றியமைச்சர் திரு.ஜெகத்ரட்சகன் அவர்கள் பெற்றுக் கொண்டார்கள் . இந்நிகழ்வில் பேராசிரியர் சுப.வீரபாண்டியன் அவர்கள் அறிமுக உரையும், ப.திருமாவேலன் அவர்கள் ஏற்புறையும், கருஞ்சட்டைப் பதிப்பக இயக்குனர் பெல். ராஜன் அவர்கள் நன்றியுரைம், கவிதா பதிப்பகம் சொக்கலிங்கம் அவர்கள் வரவேற்புரை வழுங்கினார்கள். ●

